**Christian Olympics** (TAMIL)

# கிறிஸ்தவ ஒலிம்பிக்ஸ்

*R. ஸ்டான்லி, 25 ஜூலை 2021*

2021 ஒலிம்பிக் போட்டிகளின் பதக்கப் பட்டியலைத் தெரிந்துகொள்ளவே பேரார்வத்துடன் தொலைக்காட்சிகளையும் செய்தித்தாள்களையும் இந்நாட்களில் நாம் பார்க்கிறோம். ஒலிம்பிக்ஸ் என்பது நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் அகிலவுலக விளையாட்டுப் பந்தயமாகும். ஜப்பானிலுள்ள டோக்கியோ நகரில் இப்பொழுது நடந்துகொண்டிருக்கும் ஒலிம்பிக் போட்டிகள் 2020இல் நடைபெறவேண்டியவை. கரோனா நோய்த்தொற்றுக் காரணமாக அவை இவ்வாண்டிற்குத் தள்ளிவைக்கப்பட்டு **ஒலிம்பிக்ஸ் 2021** என்றழைக்கப்படுகிறது. உலகின் 206 நாடுகளிலிருந்து 11,000 விளையாட்டு வீரர்கள் பிரம்மாண்டமான இந்நிகழ்வில் கலந்துகொள்கின்றனர். மிகப்பெரிய எதிர்பார்ப்புடன் இந்தியாவிலிருந்து நாம் 127 போட்டியாளர்களை அனுப்பிவைத்துள்ளோம். கிரேக்க நாட்டிலுள்ள ஒலிம்பியா என்ற நகரிலேயே இப்போட்டிகள் முதலாவது நடைபெற்றன. போட்டிகளில் வெற்றி பெற்றோர் காட்டொலிவ மர இலைகளாலான கிரீடத்தால் கவுரவிக்கப்பட்டனர். இதனையே பவுலடியார் 1 கொரிந்தியர் 9:24-26இல் ''வாடும் கிரீடம்'' என்றழைக்கிறார். அவர் கிறிஸ்தவ வாழ்வை ஓட்டப்பந்தயத்திற்கும் மல்யுத்தத்திற்கும் ஒப்பிடுகிறார் (வச 26; 2 தீமோ 4:7). ஆனால் இதில் பெரிய வித்தியாசம் என்னவென்றால், ஒலிம்பிக் விழாவில் ஒவ்வொரு போட்டியிலும் ஒருவர்தான் வெற்றி பெறுவார்; கிறிஸ்தவ ஓட்டத்திலோ பங்கேற்கும் அனைவரும் வெற்றிபெற வாய்ப்புண்டு. கிறிஸ்தவ ஓட்டம் என்பது ஒரு போட்டி (competition) அல்ல; அது வெற்றிகரமாய் முடிப்பதையே (completion) குறிவைக்கும். ஒலிம்பிக் போட்டிகள் 16 நாட்கள் மட்டுமே, 23 ஜூலை முதல் 8 ஆகஸ்டு வரை, நடக்கும்; கிறிஸ்தவ ஓட்டமோ வாழ்காலம் முழுவதும் நீடிக்கும்!

தனது வாழ்வை வெற்றிகரமாய் முடிக்கும் கிறிஸ்தவனைத் திருவிவிலியமானது **''ஜெயங்கொள்ளுகிறவன்''** (OVERCOMER) அல்லது ''வெற்றியாளன்'' என்றழைக்கிறது. இச்சொல்லும் இதற்கிணையான சொற்களும் பைபிளிலுள்ள வேறெந்தப் புத்தகத்தையும்விட வெளிப்படுத்தல் புத்தகத்திலேயே அதிகம் தடவை வருகின்றன. இப்புத்தகத்தை ஓய்வுநாள் பள்ளிச் சிறுமியொருத்தி எவ்விதம் சுருக்கிக் கூறினாள் தெரியுமா? ''இயேசு வெல்கிறார்!'' (Jesus wins!). என்னே புரிதல்! இயேசுவைப் பொருத்தவரை அவரது வெற்றி நமதே (யோ 16:33ஆ)! மண்ணுலகப் போராட்டங்களை அவரது பிள்ளைகள் யாவரும் வென்று, விண்ணக வீதிகளில் தங்களது வெற்றியை அவர்கள் மகிழ்கொண்டாடவேண்டுமென்பதே அவரது நித்திய வாஞ்சை. வெற்றிக்கான வழிமுறைகளை வெளிப்படுத்தல் 2 மற்றும் 3ஆம் அத்தியாயங்களில் அவர் வரையறுத்துள்ளார். ஏழு சபைகளுக்குப் பரிசுத்த ஆவியானவர் மூலம் அவர் ஒலித்த செய்திகளில் இவை அடங்கியுள்ளன. **''ஜெயங்கொள்ளுகிறவன் எவனோ ...''** என்ற சொற்றொடரோடுதான் இவ்வேழு கடிதங்களில் ஒவ்வொன்றும் முடிவடைகிறது (வெளி 2:7,11,17,26; 3:5,12,21).

அப்போஸ்தலன் பவுலுக்கு விளையாட்டுப் போட்டிகள் அதிகம் பிடித்திருக்கும். கிரேக்கர் மற்றும் ரோமர் கலந்திருந்த கலாச்சாரத்தில் வாழ்ந்த அவர் ஓட்டப்பந்தயம் மற்றும் குத்துச்சண்டைகளைத் தனது கடிதங்கள் அல்லது உரைகளில் அடிக்கடி மேற்கோள் காட்டியுள்ளார் ((1 கொரி 9:24-27; கலா 2:2; 5:7; பிலி 2:14; 3:13,14; 2 தீமோ 2:5; 4:7; அப் 20:24). விளையாட்டுப் பந்தயங்கள் பலவற்றை அவர் கண்டு ரசித்திருப்பார். (இன்று வரை எனக்குக் கிரிக்கெட் புரிவதில்லை, வெட்கம்!) பவுலுக்கு உடல் பலக்குறைவு மட்டும் இல்லாதிருந்தால் அவர் ஒரு மல்யுத்தக்காரராய் மாறியிருப்பார்! போட்டிகளில் பங்கேற்போர் அதனதன் விதிமுறைகளைக் கடைபிடிக்கவேண்டியதன் அத்தியாவசியத்தை அவர் வலியுறுத்தினார் (2 தீமோ 2:5). நாம் வெற்றிவீரராய்த் திகழவேண்டுமானால் பின்பற்ற வேண்டிய தெளிவான சட்டதிட்டங்களை நமது **வெற்றி வேந்தராம் இயேசுவானவர்** வெளிப்படுத்தல் புத்தகம் 2ஆம், 3ஆம் அத்தியாயங்களில் தெளிவாய்ப் போதித்துள்ளார். அவற்றில் இருபத்தைந்தினை நான் இங்கு வரிசைப்படுத்தியுள்ளேன். இவை திருச்சபையின் தலைவராகிய இயேசு இச்சபைகளில் பாராட்டியவை அல்லது வெறுத்தவையின் அடிப்படையிலானவை. முதலாவது இவ்விரு அத்தியாயங்களையும் கவனமாய் வாசியுங்கள்;

-- 2

அடுத்து, திறந்த வேதாகமத்துடன் கீழ்க்கண்ட பட்டியலிலுள்ள ஒவ்வொரு குறிப்பையும் தியான வுணர்வுடன் படியுங்கள்.

(1)

எத்தனை இடையூறுகளும் இன்னல்களும் இருந்தாலும் கர்த்தரது பணியில் பெருகிக்கொண்டேயிருங்கள். மக்களுக்கு நல்லது செய்வதில் சோர்ந்துபோகாதிருங்கள். விட்டுவிடலாம் என்று நினைக்கவே கூடாது. (வெளி 2:2,3)

(2)

தீயவர்களோடு சமரசம் பண்ணாதிருங்கள். முதுகெலும்புள்ளவர்களாய்க் கர்த்தரில் பலப்பட்டு நின்றிடுங்கள். (2:2)

(3)

தங்களைத் தாங்களே அப்போஸ்தலரென்றும் தலைவர்களென்றும் நியமித்துக்கொண்டு, தங்கள் பட்டங்களில் தம்பட்டம் அடிப்பவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். தன்னைத்தான் உயர்த்துவது பேய்த்தனம். (2:2)

(4)

தேவன் மீதும், அவரது வசனத்தின் மீதும், அவரது மக்கள் மீதும் உங்களுக்கிருந்த ஆதி அன்பை அவ்வப்போது புதுப்பித்துக்கொள்ளுங்கள். இயல்பாகவே குளிர்ந்துபோவதற்கான போக்கைத் தடுத்து நிறுத்துங்கள். (2:4)

(5)

உங்களில் பின்மாற்றம் காணப்படும் பகுதிகள் மற்றும் தேவனை விட்டு விலகிப்போன காரியங்கள் ஆகியவற்றிலிருந்து மனந்திரும்புங்கள். அடிக்கடி தற்பரிசோதனை செய்துகொள்வது இதற்குதவும். (2:5)

(6)

தங்களை ஆச்சாரியர் (clergy) என்று சொல்லிக்கொண்டுத் தங்களை உயர்த்தி, விசுவாசிகளை இரண்டாந்தரக் குடிகள்போல் பாவிக்கிறவர்களை விட்டு ஒதுங்கிவிடுங்கள். (2:6,15)

(7)

சுவிசேஷத்திற்காய்ப் பாடுகளையும் உபத்திரவங்களையும் அனுபவிக்கும்போது, சிறைவாசம் காத்திருந்தாலும், உறுதியாய் நின்றிடுங்கள். இரத்தசாட்சிகளின் காலம் இன்னும் முடிந்துபோகவில்லை. (2:9,10)

(8)

பெயர்க் கிறிஸ்தவர்களிடமிருந்து வரும் நிந்தை மற்றும் கேலிப்பேச்சுகளால் சோர்ந்துபோகாதிருங்கள். திருவசனத்தைவிடத் தங்கள் ஆலயத்திற்கும், சடங்காச்சாரங்கள் மற்றும் பாரம்பரியங்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்த யூதரே இயேசுவைச் சிலுவையிலறைந்தனர். (2:9ஆ)

(9)

உங்கள் ஆன்மாவை அல்ல, உங்கள் உடலை மட்டுமே கொல்லத் திறனுள்ளவர்களுக்குப் பயப்படாதிருங்கள். இரத்தசாட்சி மரணம் என்பது எவ்வளவு வேதனையானதாயிருந்தாலும் அது அபூர்வமான பாக்கியம். (2:13)

(10)

சிலுவை அல்லது பீடங்கள் அல்லது சொரூபங்களுக்குமுன் வணங்குதல் போன்றவற்றையும், மற்றும் அனைத்துவகை விக்கிரகாராதனைச் செயல்பாடுகளையும் அறவே ஒழித்திடுங்கள். (2:14,20)

(11)

பாலியல் பாவங்களுக்கு விலகியோடுங்கள். தோல்விகளை நியாயப்படுத்தாதிருங்கள்; மன நிர்ணயங்களிலிருந்து கீழிறங்காதிருங்கள். மணவாழ்வில் தூய்மை காத்திடுங்கள். (2:14,20)

(12)

சோர்ந்துபோகாமல் கர்த்தருடைய பணியில் பெருகிக்கொண்டேயிருங்கள். தளர்வு மற்றும் வேகமிழப்பு போன்றவற்றைத் துவக்கத்திலேயே அடையாளங்கண்டு தவிர்த்திடுங்கள். (2:19)

-- 3

(13)

தேவனுக்குமுன் ஒளிவுமறைவின்றி நடப்பதன் மூலமாகவும், இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டுக்கொண்டே இருப்பதன் மூலமாகவும் உங்கள் மனதையும் உள்ளத்தையும் தூய்மையாய்க் காத்துக்கொள்ளுங்கள். (2:23)

(14)

சாத்தானை அல்ல, தேவனையே நினைத்துக்கொண்டிருங்கள்.
ஆன்மீக யுத்தம் என்ற பொருள்மீது அளவுகடந்த ஆர்வம் காட்டாதிருங்கள்.
மறைவானவற்றைத் தோண்டித் துருவாதிருங்கள். (2:24)

(15)

பெயரளவிற்கோ, வெளித்தோற்றத்திற்கோ முக்கியம் தராமல்,
நிசமானவர்களாய் வெளிப்படைத்தன்மை உள்ளவர்களாயிருங்கள்.
தேவனது கண்களை நினைவிற்கொண்டு எல்லாவித மாய்மாலத்தையும் அகற்றிடுங்கள். (3:1)

(16)

உங்கள் வாழ்வில் பலக்குறைவும் தடுமாற்றமுமுள்ள பகுதிகளை
விழிப்புள்ள ஜெபத்தினாலும் கிரமமான திருமறைத் தியானத்தினாலும் திடப்படுத்துங்கள். (3:2)

(17)

கிறிஸ்துவின் வருகைக்கு ஆயத்தமாயிருக்கவேண்டுமென்பதற்காகவே பிரதானமாக ஜெபத்தில் விழித்திருங்கள். அவரது இரண்டாம் வருகை குறித்த உற்சாகமான எதிர்பார்ப்புகளால் நிறைந்திருங்கள். (3:3)

(18)

புனித வாழ்வுக்கடுத்த காரியங்களில், பிசாசின் பெரும்பான்மையினருக்கு மறுப்பு தெரிவித்து, தேவனது சிறுபான்மையினருடன் நின்றுகொள்ளுங்கள். கருப்பென்றும் வெள்ளையென்றும் இல்லாத சாம்பல் நிறப் பகுதிக்குள் சரிந்துவிடாதிருங்கள். (3:4)

(19)

நற்செய்தியறிவிப்புப் பணிக்குத் திறவுண்ட வாசல் அடைபடுமுன் தீவிரமாய்ச் செயல்படுங்கள்.
நாளை நமதல்ல; இன்றே இரட்சிப்பின் நாள்.
எச்சூழலிலும் கிறிஸ்துவை மறுதலித்துவிடாதிருங்கள். (3:8)

(20)

மக்களை உங்கள்பால் ஈர்க்கும் இறையன்பில் நிலைத்திருங்கள்.
மண்ணுலகிற்குப் பயன்பட முடியாத அளவு விண்ணுலகச் சிந்தையில் மூழ்கிவிடாதிருங்கள்.
மனிதராயிருங்கள். (3:9)

(21)

உங்கள்மீது தேவன் எப்பொழுதும் பிரியமாயிருக்கும்படி அவருக்கு இடையறாது, நெடுகவே, கீழ்ப்படிந்து வாழ்ந்திடுங்கள். அவரது புன்முறுவலை இழப்பதைவிட, தேவைப்பட்டால், மனிதரின் ஆலோசனைகளைப் புறக்கணிப்பது மேல். (3:10)

(22)

உங்களது ஆன்மீகச் செல்வங்களையும் பிறப்புரிமைகளையும் குறித்து ஏனோதானோ என்றிராதிருங்கள். புதிய ஏற்பாட்டு நிருபங்களை அடிக்கடி வாசித்துப் பார்த்து உங்களுக்கருளப்பட்டுள்ள ஆசிகளை நினைவுபடுத்திக்கொள்ளுங்கள். (3:11)

(23)

ஆவியில் அனலாயிருங்கள். தேவனுக்கடுத்த காரியங்களில் ஒருபோதும் உற்சாகமிழக்காதிருங்கள். உங்கள் பலிபீட அக்கினி அவியாது ஜொலித்தவண்ணம் இருக்கவேண்டும். வெதுவெதுப்பான நிலையை வெறுத்திடுங்கள். (3:15)

(24)

இறைப்பிரசன்னத்தில் உங்களை அடிக்கடி தற்பரிசோதனை செய்யுங்கள். அவரது வசனத்தைப் புத்துணர்வுடன் வாசிப்பதன் மூலமாகவும், அவரது ஆவியானவரால் எப்பொழுதும் நிறைந்திருப்பதன் மூலமாகவும் உங்கள் குறைவுகள் நிவர்த்தி செய்யப்படும்படி அவரை நாடுங்கள். (3:17,18)

(25)

தேவனது குரலைக் கேட்கும்படி உங்கள் இருதயத்தை எப்பொழுதும் திறந்து வைத்திருங்கள். அவரது உந்துதல்கள் மற்றும் மெல்லிய சத்தங்களைக் கவனிக்கக் கூர்மையுடன் இருங்கள். கடினப்பட்டுப்போகாமல் அவருக்குமுன் நொறுங்கியவண்ணம் வாழ்ந்திடுங்கள். (3:20)

**இந்த 25 பாடங்களும் அதிமுக்கியமானவை. ஏனெனில், இவைதான் திருச்சபைக்கும் திருச்சபையினருக்கும் கிறிஸ்து கொடுத்த ''இறுதிச்'' செய்தியில் அடங்கியுள்ளவை.**

**பதக்கங்களா, பலாபலன்களா?** (Awards or Rewards?)

ஒலிம்பிக் போட்டிகளில் கொடுக்கப்படும் பதக்கங்கள் தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலம் ஆகியவற்றினால் ஆனவை. வெற்றிவாகை சூடுவோரின் முகங்களில் பளிச்சிடும் குதூகலமும், அவர்களது சொந்த நாடுகளில் எழும் கோஷங்களும் விவரிக்க முடியாதவை! கிறிஸ்தவ வாழ்வையும் பணியையும் வெற்றியாய் முடிப்பவர்களுக்குக் கிறிஸ்து வாக்குப்பண்ணியுள்ளது பதக்கங்கள் அல்ல, **பலாபலன்கள்!** அவை யாவன? ''வாழ்வு தரும் மரத்தின் கனி, இரண்டாம் இறப்பு இல்லாமை, மறைவான மன்னா, பெறுகிறவனுக்கு மட்டுமே தெரியும் பெயர் எழுதப்பட்ட வெள்ளைக்கல், நாடுகள்மீது ஆளுகை, விடிவெள்ளி நட்சத்திரம், வெண்ணுடைகள், தேவாலயத்தில் ஒரு தூணாகுதல், புதிய பெயர், இயேசுவானவரது மற்றும் தந்தையானவரது சிங்காசனத்தில் அமர்வு'' (வெளி 2:7,11,17,26-28; 3:5,12,21). ஜெயங்கொள்ளுவோர் அனைவரும் முடிவாக **''எல்லாவற்றையும்''** சுதந்தரித்துக்கொள்வர் (21:7). இவையெல்லாவற்றிற்கும் உத்தரவாதமாக இயேசுவானவர் தரும் வாக்கு: வெளி 22:12,13, ''இதோ, சீக்கிரம் வருகிறேன்; அவரவரது செயல்களின்படி அவரவர்க்கு நான் அளிக்கும் **பலாபலன்** என்னுடன் வருகிறது. அகரமும் னகரமும், முதலும் இறுதியும், தொடக்கமும் முடிவும் நானே!'' இதற்கு மறுமொழியாக, ''ஆமென்! கர்த்தராகிய இயேசுவே, வாரும்'' என்று நாம் அவரை அழைத்திடுவோம்!



R. Stanley
13 Church Colony, Vellore 632 006, India
*Tel: 00 91 98437 07600, 98430 11943 (WhatsApp)*
*<stanleyonbible@hotmail.com>* *<evangelinestanley1@gmail.com>*